2003 ஏப்ரல் 11]

தொடர் நடவடிக்கையை அரசு தொடர்ந்து எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 250, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

250—

சேமிப்புக் கிடங்கு

***15184—திரு. அ. சிவபெருமாள்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதியில் வேளாண் விளைபொருள் சேமிப்புக் கிடங்கு கட்டித்தர அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. அ. சிவபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழகத்தினுடைய பரப்பளவில் இரண்டாவது பெரிய தொகுதியாக விளங்கும் ஒட்டப்பிடாரம் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும், விவசாயப் பெருமக்கள் அதிகமாக வாழும் பகுதியாகும். வானம் பார்த்த பூமியை நம்பி வாழ்கின்ற மக்கள் ஆவர். விவசாயத்தைத் தவிர மற்ற எந்தத் தொழிலும் அந்தப் பகுதியிலே இல்லாத ஒரு சூழ்நிலை நடைபெற்று வருகிறது. மழை பெய்த காலங்களில் பயிரிடும் வத்தல், பருத்தி, நவதானியங்கள், இவற்றுக்கு ஏற்ற விலை வரும் வரை அவற்றைப் பாதுகாப்பாக வைப்பதற்கு அங்கே உள்ள மக்களுடைய வீடுகள் வசதியாக இல்லை. ஆகவே அவற்றைப் பாதுகாப்பாக வைத்து, நல்ல விலை கிடைக்கும்போது அவற்றை விற்பனை செய்யத் தகுந்த சேமிப்புக் கிடங்கு அமைப்பதற்கு அரசு வரும் நிதியாண்டிலாவது ஆவன செய்யுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் கடம்பூர்.

கழுகுமலை ஆகிய இரண்டு இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. கடம்பூர், ஒட்டப்பிடாரத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. ஒட்டப்பிடாரம் பகுதியில், குறிப்பாக நெல் 227 எக்டேர் பரப்பிலும், உளுந்து 7,774 எக்டேர் பரப்பிலும், மிளகாய் 2,452 எக்டேர் பரப்பிலும், மிகக் குறைந்த அளவிலேயே அந்தப் பகுதியிலே சாகுபடி செய்யப்படுகிறது. அதிலிருந்து கிடைக்கக்கூடிய விளைபொருட்கள் அறுவடை காலங்களிலேயே விற்பனை ஆகிவிடுகின்றன. ஆகவே அந்தப் பகுதியிலே வரக்கூடிய உணவுப் பொருட்களுடைய வரத்தை வைத்துப் பார்க்கிறபோது புதிதாக சேமிப்புக் கிடங்கு கட்டுகிற வாய்ப்பு குறைவாக உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

திரு. அ. சிவபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதியில் கயத்தாறு, ஒட்டப்பிடாரம் என இரண்டு ஒன்றியங்கள் உள்ளன. ஒட்டப்பிடாரம் ஒன்றியம் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி. ஆகையினால் அங்கு அவர்கள் அந்தப் பொருள்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு வீடுகளிலே எந்தவித வசதியும் இல்லை. ஆகையினால் வரும் நிதியாண்டிலாவது அதைப் பரிசீலனை செய்து கிடங்கு அமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 251, திரு. லா. சந்தானம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

251—

ஊட்டச் சத்துணவு மையம்

***20914—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி யூனியன், அல்லிக்குண்டம் ஊட்டச் சத்துணவு மையம் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?